மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

வத்திராயிருப்பு

**அசல் வழக்கு எண். 161/2024**

பி.வா.சா. 2 நெடுமாறன், S/o பாண்டி

நாள்: 13.03.2026

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனது தகப்பனாருக்கு யாரெல்லாம் வாரிசுகள் என்றால் நானும், தாயார் மாரியம்மாள், சகோதரர்கள் அழகேசன் மற்றும் கிருஷ்ணகுமார். இந்த வழக்கில் எதிர் வழக்குரை தாக்கல் செய்ய வழக்கறிஞருக்கு எனது தகப்பனார் தான் தகவல் தெரிவித்தார். எதிர் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது எனது தகப்பனார் இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். அதன் பின்பு தான் அவருடைய வாரிசுகளான நாங்கள் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டோம்.

இந்த வழக்கானது அவசிய தரப்பினர்களை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று எதன் அடிப்படையில் நான் நிரூபன வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால், எனது தகப்பனார் சொல்லி எனக்கு தெரியும். ஆனால் எனது தகப்பனார் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் இந்த வழக்கானது அவசிய தரப்பில் தரப்பினர்களை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்ற வாதம் எதுவும் முன் வைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் வழக்குச் சொத்துக்களை கிரையம் பெறுவதற்கு முன்பு, வில்லங்கச் சான்றிதழ் ஏதேனும் விண்ணப்பித்து பார்த்தாரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் நான் தான் வில்லங்க சான்றிதழை வாங்கி கொடுத்தேன். எனது தகப்பனார் விண்ணப்பம் செய்து பார்த்ததாக சொல்லக் கூடிய வில்லங்கச் சான்றிதழை எதிர்வழக்குரை

வழக்கு தாக்கல் செய்யும் பொழுது நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

வில்லங்க சான்றிதழ் விண்ணப்பித்து பார்த்ததாக நான் சொல்லியுள்ள நிலையில், எந்த வருடத்தில் இருந்து வில்லங்கச் சான்றிதழ் நான் விண்ணப்பித்து பார்வையிட்டேன் என்று சொன்னால், கிரையம் பெறுவதற்கு 25 வருடங்கள் முன்னதாக இருந்து வில்லங்கச் சான்றிதழ் விண்ணப்பம் செய்து பார்க்கப்பட்டது. நான் கூடுதல் நிரூபன வாக்குமூலம் மூலமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வில்லங்கச் சான்றிதழானது 1940 வருட முதல் 1950 வது வருடம் வரை தான் வில்லங்கம் தேடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். சுப்பிரமணிய பிள்ளை இந்திராணிக்கு 1946 வது வருடத்தில் தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்த விபரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வில்லங்கச் சான்றிதழில் 1946 வது வருட தான செட்டில்மெண்ட் ஆவணத்துக்கான பதிவுகள் காணப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

1946 வது வருட தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் வில்லங்க பாரதீனம் எதுவும் செய்யக்கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஆவணமானது எங்களுக்கு விரோதமாக இருக்கும் என்கிற காரணத்தினால், மேற்படி ஆவண பதிவை வில்லங்கச் சான்றிதழ் பதிவிலிருந்து நீக்கப்பட்டு இந்த வில்லங்கச் சான்றிதழானது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வில்லங்க சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை தான் என்னுடைய தகப்பனார் கிரையம் பெற்றார் என்று சொன்னால் சரிதான். எனது தகப்பனார் எதன் அடிப்படையில் சொத்துக்களை கிரையம் பெற்றார் என்று சொன்னால் இந்திராணிக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட தான செட்டில்மென்ட் ஆவணத்தின் அடிப்படையில் எனது தகப்பனார் கிரையம் பெற்றார்.

தான செட்டில்மெண்ட் ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு எனது தகப்பனார் கிரையம் பெற்றதாக சொல்லியுள்ள நிலையில் அந்த தான

செட்டில்மெண்ட் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எனது தகப்பனார் கிரையம் பெற்ற பின்பு 1 முதல் 3 இலக்க சொத்துக்களில் கட்டுமானம் கட்டி, விவசாயம் செய்தோம் அனுபவம் செய்து வந்ததை காண்பிக்க கட்டிட அனுமதி, தீர்வை ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். உண்மையிலேயே நான் சொல்வது போல சொத்துக்கள் என்னுடைய அனுபவத்தில் இருந்திருந்தால், அனுபவத்துக்கு உண்டான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றும், நான் அனுபவம் செய்யாத காரணத்தினால் தான் ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

வழக்கு சொத்துகளை தேக்கு மற்றும் தென்னை மரங்கள் பயிர் செய்து அனுபவம் செய்து வருவதாக நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள், எனது தகப்பனாரால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் எதுவும் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்குச் சொத்தில் விவசாயம் செய்து வருவதை காண்பிக்க சாகுபடி அடங்கல் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்துக்கள் எந்த நீதிமன்ற அதிகார எல்கைக்குள் இருந்தாலும் அந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யலாம் என்ற விபரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான்.

வாதிகள் வழக்கு சொத்தின் கூட்டு உரிமையாளர் என்ற முறையில், அவர்களுடைய அனுமதி மற்றும் கையெழுத்து இல்லாமல் எனது தகப்பனார் இரண்டு கிரைய ஆவணங்கள் மூலமாக பெற்ற இரண்டு கிரையங்களும் சட்டப்படி செல்லக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வாதிகளின் கையெழுத்து இல்லாமல் வாங்கிய கிரையமானது மோசடி ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணத்தின் அடிப்படையில், வருவாய்த்துறை ஆவணங்களில் நாங்கள் ஏற்படுத்திக் கொண்ட மாற்றங்களானது ரத்து செய்யப்படக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ளேன்

நிரூபன வாக்குமூலத்தில் வழக்கு சொத்துக்கு மதிப்பீடு குறைத்து காட்டப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல.

1 முதல் 3 இலக்க சொத்துக்களில் எங்களுடைய அனுபவம் சட்டபூர்வமான அனுபவம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றும், அவர்களுக்கு வழக்கு சொத்தில் உரிமை இருப்பதால்தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. வாதிகளுக்கு பிராதில் கோரிள்ளவாறு 1 முதல் 3 இலக்கச் சொத்துக்களை சட்டப்படி உரிமை கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/–எம்.இராமநாதன்/–
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு